**ஹக்மன பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜுலை 22 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து ஹக்மன பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டிற்கான கிடைக்க வேண்டிய ரூபா 508,506 தொகையின் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,720,782 தொகைக்கான நிர்மாண வேலை செலவு மற்றும் ரூபா 332,121 இற்கான செலவில் கொள்வனவு செய்திருந்த நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) நன்கொடையொன்றாக சபைக்கு கிடைத்திருந்த 05 கணனிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியினை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 1,822,370 தொகைக்கான 03 நிர்மாண வேலைகளுக்காக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் குறைவாக ஏற்பாடு செய்திருந்ததுடன், மேலும் 07 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 1,106,399 தொகைக்கான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

(உ) 2013 ஆண்டின் போது ரூபா 1,188,192 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பல்கரும கட்டிடத்தினதும் காணியினதும் பெறுமதியினை சபையின் சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள கூட்டுத்தொகை ரூபா 10,991,744 தொகைக்கான 14 கணக்கு விடயங்களுடன் தொடர்பான மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/

அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 2,595,614 இற்கான ஒப்பற்ற தன்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் கணக்குகள் முன்கொண்டு வந்து காணப்படும் தொங்கல் கணக்கிலுள்ள ரூபா 873,211 இற்கான வரவு மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொண்டு கணக்குகளை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 6,990,621 தொகைக்கான நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 49,990 தொகைக்கான மீதியொன்று உள்ளடங்கியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 14,073,427 தொகைக்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதியில் 03 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 5,125,991 இற்கான 92 மீதிகள் உள்ளடங்கியுள்ளன.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 6,744,350 தொகைக்கான கேள்வி வைப்புக்கள், பலவின வைப்புக்கள் மற்றும் ஒரே தடவை வைப்புக்களின் மீதிகளில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 2,746,771 இற்கான 240 மீதிகள் உள்ளடங்கியுள்ளன.

(ஈ) முன்னைய ஆண்டுகளில் இருந்து தீர்க்கப்படாமல் முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 608,228 தொகைக்கான திருப்பிச் செலுத்த வேண்டிய 07 மீதிகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 195,790,360 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக முறைசார் விதமாக மற்றும் நாளது வரை தயாரிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் வருடாந்த கணிப்பீட்டு சபை அறிக்கையும், முறையே கூட்டுத்தொகை ரூபா 6,990,621 தொகை மற்றும் கூட்டுத்தொகை ரூபா 14,073,427 தொகைக்கான பலவினக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக முறைசார் விதமாக மற்றும் நாளது வரை ஆக்கப்பட்ட பதிவேடுகளும், கூட்டுத்தொகை ரூபா 2,385,235 தொகைக்கான உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன்மீதி தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட கடன் பதிவேடு மற்றும் மீதியை உறுதிப்படுத்தலும், கூட்டுத்தொகை ரூபா 1,455,041 வைப்புத் தொகை தொடர்பாக விரிவான அட்டவணை ஆகிய சான்றுகள் சபைக்கு சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் 03 வருட காலத்தை மிகைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 2,077,689 இற்கான செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள் மற்றும் பலவின வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,636,949 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,177,140 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 6,459,809 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தில் 84 சதவீதத்தை மிகைத்த மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டது.

(ஆ) சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து மீளாய்வாண்டினைப் போலவே கடந்த இரண்டு வருடங்களிலும் கணிசமான பெறுமதிகளில் மீண்டுவரும் செலவுக் அதிகரித்திருந்ததுடன் சுயமாக உருவாக்கிய வருமானத்தினால் மீண்டுவரும் செலவுகளை மேவகை செய்வதற்காக எவ்விதத்திலும் இயலாத ஒரு நிலைமையினைக் காட்டியது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வீதவரி மற்றும் வரி

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை ரூபா 432,920 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 1,001,671 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,434,591 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 686,372 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 748,219 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை ரூபா 46,560 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 7,790 தொகை காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 5,120 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 49,230 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

#### 2.3.2 வாடகை

ஆரம்ப நிலுவை ரூபா 226,129 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 2,273,073 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 2,499,202 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 2,131,970 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 367,232 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 665,037 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 9,246,695 தொகையும் கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் சபையினால் பல்வேறு நிதியேற்பாடுகளின் கீழ் ரூபா 5,600,000 தொகைக்கான 32 வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், அவற்றில் வேலைத் திட்டம் ஏதும் செயற்படுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும், பாதீட்டில் உட்படுத்தப்படாத கூட்டுத்தொகை ரூபா 5,997,175 தொகைக்கான 06 நிர்மாண வேலைகள் பல்வேறு நிதியேற்பாடுகளின் கீழ் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

### 3.2.1 மனித வள முகாமைத்துவம்

சபையின் பதவியணியில் இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர பதவிகளில் காணப்பட்ட 05 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அல்லது அனைத்து பதவிகளிலும் காணப்பட்ட 13 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2.2 பதவியணிக் கடன்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பதவியணிக் கடன் மீதி ரூபா 4,435,909 தொகையாக காணப்பட்டதுடன், 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் தவணைப் பணம் மற்றும் வட்டி அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 240,190 தொகைக்கான 03 மீதிகளும் இதில் அடங்கியிருந்தது.

### 3.3 செயற்பாட்டு திறமையின்மை

மகநெகும செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆண்டு முதல் சபைக்குக் கிடைத்திருந்த 10 சதவீத தடுத்து வைத்தல் வைப்பு விண்ணப்ப உறுதிச் சான்றுகள் 76 தொடர்பான ரூபா 4,686,382 தொகைக்கான பணம் 2017 ஜூன் 20 திகதி வரை ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தியிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2012 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை மகநெகும செயற்திட்டங்களின் மூலம் நிறைவேற்றியிருந்த 94 நிர்மாண வேலைகளுக்கான தடுத்து வைத்தல் பணத்தை செலுத்துவதற்காக கிடைத்திருந்த ரூபா 4,636,078 தொகையொன்றினை உரிய விடயத்திற்கு பயன்படுத்தப்படாமல் சபையினால் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகளை செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 470,000 கிரயத்தையுடைய 05 வாகனங்கள் செயற்படாமல் காணப்பட்ட போதிலும் அவற்றை பழுதுபார்த்து ஓடுவதற்கு பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நன்கொடையாக கிடைத்திருந்த மெய்விருத்தி தொகுதியொன்று 2011 ஆண்டு முதலும், ரூபா 130,862 கிரயத்தையுடைய கொங்கிரீட் அச்சுக்கல் இயந்திரம் 2010 ஆண்டு முதல் செயற்படுத்தப்படாமல் காணப்பட்டது.

## 3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக சேதனைப் பசளை உற்பத்தி செயற்களம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2012 ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 1,000,000 தொகை செலுத்தி காணி ஒன்று கொள்வனவு செய்திருந்த போதிலும், அவ்விடயம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. சேகரிக்கப்படும் குப்பைகள் வகைப்படுத்தப்படாமல் காணி ஒன்றில் அகற்றப்பட்டு மண்ணினால் மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது குப்பைகளை சேகரிப்பதற்காக ரூபா 7,388,651 தொகை மற்றும் கடந்த 05 வருடங்களில் குப்பை முகாமைத்தவத்திற்காக ரூபா 25,247,827 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் வருமானம் ஏதும் உழைக்க முடியாதிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 06 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 5,037,007 தொகைக்கான சேமிப்புக்கள் 04 வருமான விடயங்களின் நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 2,123,510 தொகையும் காணப்படுகின்றமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 439,720 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்

2009 ஜுன் 09 திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு